**செய்தி வெளியீடு எண்:662** **நாள்: 07.10.2017**

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (7.10.2017) தருமபுரியில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை

பொறுமையில் பூமாதேவி,
பொங்கினால் கடல் சீற்றம்,
கருணையில் கார்மேகம்,
உறுதியில் குன்று,
கொடுப்பதில் கற்பக விருட்சம்,
சிந்தனையில் சுரங்கம்,

துணிவில் தந்தை பெரியார்,
அறிவில் அறிஞர் அண்ணா,
பரிவில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.,
அத்தனையும் கலந்த அமுதத் தெளிவு,
எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவிஅம்மா
அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியாலும் அருளாலும் நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்று மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை கொண்டாடுவது எங்கள் அனைவருக்கும் கிடைத்த பெரிய பாக்கியமாகக் கருதுகின்றேன்.

அந்த வகையில் இன்று தருமம் மிகு தருமபுரியில் நடைபெறும் பொன்மனச் செம்மல், மக்கள் திலகம்,
ஏழைகளின் இதயக்கனி, எங்கள் தங்கம்
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்
அவர்களின் நூற்றாண்டு விழாவில்
கலந்து கொண்டு உங்களையெல்லாம்
சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியும்,
பெருமையும் அடைகிறேன்.

தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. **தனபால்** அவர்களே!

சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர் டாக்டர் **தம்பிதுரை** அவர்களே!

மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு.**ஓ.பன்னீர்செல்வம்** அவர்களே!

முன்னிலையுரை ஆற்றிய
மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர்
திரு. **கே.பி. அன்பழகன்** அவர்களே!

வரவேற்புரையாற்றிய
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர்,
திரு. இரா. வெங்கடேசன் அவர்களே

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே !
நன்றியுரை ஆற்ற உள்ள
தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர்
திரு. **கே. விவேகானந்தன்** அவர்களே!

வருகை தந்துள்ள
நாடாளுமன்ற உறுப்பினர்களே!
சட்டமன்ற உறுப்பினர்களே!
தலைமைக் கழக நிர்வாகிகளே,
முன்னாள் அமைச்சர் பெருமக்களே!
முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே!
கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே!
முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!
கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற
கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!
வணக்கத்திற்குரிய பெரியோர்களே!
தாய்மார்களே! இளைஞர்களே!
நலத்திட்டப் பயனாளிகளே!
பரிசு பெற வந்துள்ள மாணவ மணிகளே,
உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது
வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

வீரமும், ஆன்மிகமும், தருமமும் தன்னகத்தே கொண்ட இயற்கை எழில் கொஞ்சும்
புண்ணிய பூமிதான் இந்த தருமபுரி மாவட்டம்.
தனக்கு கிடைத்த அரிய நெல்லிக்கனியை
தமிழ் மூதாட்டி அவ்வையாருக்கு
தமிழ் வாழ்வதற்காக வழங்கிய
ஏழு வள்ளல்களில் ஒருவரான
அதியமான் ஆட்சி பரவி இருந்த பகுதியை
'தகடூர் நாடு' என அழைத்தனர்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தகடூர் நாடு

‘கங்க நாடு’ என்று அழைக்கப்பட்டது.
அது தான் இப்போது தருமபுரி என்றழைக்கப்படுகின்றது.

தமிழ் மூதாட்டி அவ்வையார் அவர்கள்
புறநானூற்று பாடல்களில் 23 பாடல்களில்
அதியமான் நெடுமாறன் அஞ்சியைப் பற்றி
பாடி உள்ளார்.

இம்மன்னர் தகடூர் என்ற
தருமபுரியை தலைநகராக கொண்டு
ஆட்சி செய்திருக்கிறார்.

பல்லவர்கள், கங்கர்கள்,
பாணர்கள், நுளம்பர்கள்,
சோழர்கள், போசாளர்கள்,
விஜய நகர பேரரசுகள், மராட்டியர்,
அத்திமல்லர், மைசூர் அரசர்கள்,
உள் நாட்டு நாயக்கர்கள், ஆங்கிலேயர்கள்
என பலர் தருமபுரியை பல்வேறு காலகட்டங்களில் ஆண்டுள்ளார்கள்.

தருமபுரியைப் பற்றி சர் தாமஸ் மன்றோ
அவர்கள் தர்மபுரியைப் பற்றி
**“இது மிகவும் ரம்மியமான இடம்,
இவ்விடத்தில் உள்ள ஒவ்வொரு மலையும்,
மரமும் எனக்கு இன்பத்தைத் தருகிறது”**
என்று குறிப்பிடுகின்றார்.

இவருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில்
அவருக்கு அமைக்கப்பட்டுள்ள நினைவு தூண் இம்மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கிறது.

அதியமான் கோட்டையில் உள்ள
**காலபைரவர் கோயில்,
கோட்டைக் கோயில்,**
சென்றாய பெருமாள் கோயில்,

தீர்த்த மலையில் அமைந்திருக்கும் அனுமந்த தீர்த்தம், தீர்த்த கிரீஸ்வரர் கோயில் போன்ற பல ஆன்மிகத் திருத்தலங்கள் தருமபுரியை அலங்கரிக்கின்றன.

அஹிளா ஹதீஸ் பள்ளிவாசல்,
தௌகீத் பள்ளிவாசல்,
ஜும்மா பள்ளிவாசல்,

பள்ளிப்பட்டியிலுள்ள
மௌன்ட் கார்மேல் சர்ச் ஆகியவை இம்மாவட்டத்திற்கு சிறப்பு சேர்க்கிறது.

தருமபுரி அரூர் வட்டத்திலுள்ள மலைக்கோயில், பாப்பிரெட்டிபட்டி வட்டத்தில் உள்ள
வாணியாறு அணை, ஒகேனக்கல் அருவி
ஆகிய சுற்றுலாத்தலங்கள் தருமபுரியில் உள்ளன.

**'இந்தியாவின் நயாகரா'** என புகழப்படும்
ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி மற்றும்
இங்குள்ள ஐந்தருவி நீர்வீழ்ச்சிகள்,
தொங்குபாலம், பரிசல் பயணம்,
எண்ணெய் குளியல் ஆகியவை
சுற்றுலா பயணிகளை கவர்ந்திருக்கின்றன.

தீர்த்தமலையில் இரும்பு கனிமவளம் இருப்பதும் இங்குள்ள சுனைநீர் இரும்பு சத்துடன் இருப்பதும் சிறப்பாகும்.

தருமபுரி மாவட்டத்தில் பலவகை
உயர்ரக கிரானைட் கற்கள் கிடைக்கின்றன.
தருமபுரியின் மொத்த சாகுபடி பரப்பளவில்
மூன்றில் ஒரு பங்கு அளவுக்கு
மாம்பழம் சாகுபடி செய்யப்படுகின்றது.
இதைத்தவிர தக்காளி, மிளகாய் போன்றவையும் பெருமளவில்
பயிரிடப்படுகின்றன.

இந்திய விடுதலை போரில் தனது வாழ்வையே அர்ப்பணித்த திரு. சுப்பிரமணிய சிவா அவர்களுடைய சமாதி அமைந்துள்ள பாப்பாரப்பட்டியில்
தமிழ்நாடு அரசால் நினைவிடம் எழுப்பப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

1965 – ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்திலிருந்து தருமபுரி மாவட்டம் உருவாக்கப்பட்டது.
**தமிழ் நாட்டுக்கு வளம் சேர்க்கும் காவிரி நதி தமிழகத்தில் நடக்கத் தொடங்குவது இந்த மாவட்டத்தில் தான்.**

தருமபுரி மாவட்டத்தில் இத்தகைய
பிரமாண்டமான விழா இத்தனை சீறும் சிறப்புமாக
சிறப்பாக நடைபெற, மாண்புமிகு அமைச்சருடன் ஒன்றிணைந்து செயலாற்றிய
.அனைத்து மாவட்ட, ஒன்றிய, பேரூர் மற்றும் ஊராட்சிக் கழக
செயல் வீரர்களையும் இவர்களுடன்இணைந்து
செயலாற்றிய அரசு அலுவலர்களையும்
நான் இங்கு பாராட்ட கடமைப்பட்டுள்ளேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொண்டர்களால் தொடங்கப் பெற்று மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் தலைமையேற்று நடத்தப்பெற்ற இயக்கம்.

தி.மு.க–விலிருந்து மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பிரிந்த போது,
தந்தைப் பெரியார் அவர்கள்,
சத்யா ஸ்டுடியோவிலிருந்த புரட்சித் தலைவரை
நேரில் சந்தித்து, சமாதானப்படுத்தி,
திரும்பவும் திமுகவுடன் சேர்வதற்கு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தார்.

அப்போது, எம்.ஜி,ஆர் மன்றத்தை சார்ந்த
திரு. முசிறிப்புத்தன் தனது தலையில் இரத்தம் சொட்ட சொட்ட, பதட்டத்துடன் ஓடி வந்து,

**‘தலைவரே நம்ம மன்றத்து ரசிகர்களை**
**திமுகவினர் கடுமையாக தாக்குகிறார்கள்.**
**இனிமேல் சமாதானம் வேண்டாம்,**
**நாம் தனிக்கட்சியை தொடங்கி விடுவோம்’**
என்று வேகமாக வெளியேறிவிடுகிறார்.

அந்த வகையில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்குவதற்கு காரணமாக இருந்தது எம்.ஜி.ஆர் மன்றம் தான்.

அப்படி தொடங்கியதுதான் இந்த கழகம்.
மற்ற கட்சிகளில் எல்லாம் தலைவர் வழியில் தான் தொண்டர்கள் செல்வார்கள்.

ஆனால், அரசியல் வரலாற்றிலேயே,
முதன்முதலாக தொண்டர்கள் வழியில்
சென்ற ஒரே தலைவர் **மாண்புமிகு**
**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்தான்.**

**இந்த கழகத்தின் பெயரையும் கொடியையும் அறிவித்தவர்கள் கழகத் தொண்டர்கள்தான்.**

**அதனால்தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நடிகராக இருந்த போது ரசிகர்களாக இருந்தவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைவரானபோது தொண்டர்களாக மாறினார்கள்.**

**மாண்புமிகு புரட்சித் தலைவர் அமரரான பிறகு, அத்தொண்டர்கள் பக்தர்களாக மாறினார்கள்.**

இப்படிப்பட்ட ஒரு தலைவரையும்,
இப்படிப்பட்ட தொண்டர்களையும்

இனிமேல் உலகில் யாரும் பார்க்கப் போவதில்லை.

எம்.ஜி.ஆர் மன்ற மாநாட்டில்தான்
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு செங்கோலை வழங்கினார்கள்.

தலைவர் அவர்கள் அந்த செங்கோலை திரும்பவும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களிடமே வழங்கி திராவிடத்தின் நான்காம் அத்தியாயத்தை தொடங்கி வைத்தார்கள்.

தொண்டர்களை தலைவர்கள் நிலையில் வைத்து மதிக்கக்கூடியவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். **ஒரு சம்பவத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.**

புதுச்சேரி மீனவர் குப்பத்தைச் சேர்ந்த
இளைஞர் கோவிந்தசாமி என்பவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் தீவிர ரசிகர்.

தனது திருமணத்தை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தான் நடத்தி வைக்க வேண்டும் என்று கோவிந்தசாமி பிடிவாதமாக இருந்தார்.

புரட்சித் தலைவர் அவர்களுக்கு தன் விருப்பத்தை கடிதம் மூலமும் தெரிவித்திருந்தார்.
**அந்தக் கடிதம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் கவனத்திற்கே செல்லவில்லை.**

ஒரு நாள் கோவிந்தசாமியின் பெற்றோரும் உறவினர்களும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ராமாவரம் தோட்டத்துக்கு வந்து பார்வையாளர்களுடன் நின்று புரட்சித் தலைவரை சந்தித்து அவர்களது மகன் கோவிந்தசாமியின் விருப்பத்தையும் அது நிறைவேற தாமதம் ஆவதால் பித்துபிடித்தவன்போல் இருக்கிறான், அவன் திருமணத்தை நீங்கள் தான் நடத்திவைக்க வேண்டுமென்று உருக்கமாக கூறினர்.

அதற்கு,
**"நான் விரைவில் புதுச்சேரிக்கு வரவிருக்கிறேன். அப்போது உங்கள் விருப்பத்தின்படி திருமணத்தை நடத்தி விடலாம்",**
என்று புரட்சித் தலைவரும் ஒத்துக் கொண்டார்கள்.

அதன்படி, சில நாட்கள் கழித்து மாண்புமிகு
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்

புதுச்சேரிக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது தான் தங்கியிருந்த விருந்தினர் மாளிகைக்கு மணமக்களை அழைத்து வருமாறு, உதவியாளர்களிடம் சொன்னார்கள்.
**மணமக்களை அழைத்து வரச் சென்ற உதவியாளர்களுடன் செல்வதற்கு திரு.கோவிந்தசாமி சம்மதிக்கவில்லை.**

மாண்புமிகு புரட்சித்தலைவர் எங்கள் குப்பத்திற்கு வந்து தாலி எடுத்துக் கொடுத்தால் தான்
திருமணம் செய்து கொள்வேன்
என்று பிடிவாதம் பிடித்தார்.

மாண்புமிகு புரட்சித் தலைவரின்
உதவியாளர்களுக்கு கோபம் வந்தது.

**கடற்கரையோரம் இருக்கும்
உங்கள் குப்பத்திற்கு மணலில் மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்களால் எப்படி வரமுடியும், மணலில் கார் வராது என்றார்கள்.**

**பாதையில் செடி கொடிகளை போடுகிறோம். வாருங்கள் என்றார்கள் குப்பத்துக்காரர்கள்.**

இந்த செய்தி எம்.ஜி.ஆர் அவர்களின்
கவனத்திற்கு சென்றது.

உதவியாளர்களை அழைத்து,
“**சரி நாம் அங்கேயே போகலாம்**” என்றார்.
உதவியாளர்கள் மணலில் இரண்டு கிலோமீட்டர் செல்வது சிரமம் என்று சொல்லிப் பார்த்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் கோபத்துடன், “**அந்த ரசிகரை நான் பார்த்தது கூட கிடையாது . அவருக்கு நான் எந்த உதவியும் செய்ததும் இல்லை. என் மீது இவ்வளவு அன்பாக இருக்கிறார்.
வாருங்கள் திரு.கோவிந்தசாமி இருக்கும் குப்பத்திற்கே போகலாம்**” என்றார்கள்.

பல சிரமங்களுக்கிடையில் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அந்த மீனவ குப்பத்தை அடைந்து போது திரு.கோவிந்தசாமி ‘**என் தெய்வமே**’ என்று மாண்புமிகு புரட்சித்தலைவரின்
காலில் விழுந்து கதறி அழுதார்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் திரு.கோவிந்தசாமியை கட்டி அணைத்துக் கொண்டார்கள். கோவிந்தசாமியின் விருப்பத்தின் படியே மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தனது திருக்கரங்களினால் தாலியை எடுத்துக் கொடுத்து திருமணத்தை நடத்தி வைத்து பரிசுகள்

கொடுத்துவிட்டு, நல்ல அறிவுரைகளையும் வழங்கி விட்டு மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்கள் திரும்பினார்கள்.

உள்ளத்தில் நெருஞ்சி முள்ளை வைத்துக் கொண்டு, உதட்டில் நந்தவனம் வளர்த்த
தலைவர்களையெல்லாம் நாம் பார்த்துவிட்டோம்.

இப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.
ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர் அவர்கள் திறந்த இதயத்தோடு
மக்களோடு வாழ்ந்தவர்கள் . அப்படித்தான் தொண்டர்களும்
இருக்கவேண்டுமென்று
சொல்லித் தந்தவர்கள்.

தொண்டர்களின் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கெடுத்துக் கொண்ட
மாபெரும் மக்கள் தலைவர் அவர்.

ரசிகர்கள் மட்டும் அல்ல,
தனக்கு உதவி செய்தவர்களையும்
தன் இறுதிக் காலம் வரை மறக்காதவர்
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

கஷ்டப்பட்ட காலங்களில்
தனக்கு உதவி செய்தவர்கள் யார் யார் என்று நினைத்து பார்த்து, தான் பேரும் புகழும் பெற்று வசதிபடைத்த காலத்தில் அவர்களை தேடிக் கண்டுபிடித்து அவர்களுக்கு உதவி செய்து தனது நன்றியை காணிக்கையாக்கியவர் நமது தலைவர் அவர்கள்.

தொண்டர்கள் பலமும்,
பொதுமக்களின் பெருத்த ஆதரவும்
இருந்ததால்தான் மக்கள் திலகம் புரட்சித் தலைவர் அவர்கள் அதிமுக என்கின்ற அசைக்க முடியாத ஒரு எஃகு கோட்டையை கட்டி, அதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் ஒப்படைத்து சென்றார்கள்.

புரட்சித் தலைவர் அவர்கள் விரும்பி
தனி கட்சி ஆரம்பிக்கவில்லை.
அந்த நிலைக்கு அவர் ஆளாக்கப்பட்டார்.
மக்களும், தொண்டர்களும் தான்
அவரை முதலமைச்சர் ஆக்கினார்கள்.

ஜப்பானில் உலகம் சுற்றும் வாலிபன் படப்பிடிப்பில் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் இருந்தபோது, அங்கு எதிர்பாராமல் ‘‘கல்கண்டு’’ ஆசிரியர் திரு. தமிழ்வாணனை சந்திக்கிறார்கள்.

இருவரும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது திரு.தமிழ்வாணனிடம்,

**“விரைவில் நான் அரசியலிலும் சாதிப்பேன்”**
என்று மாண்புமிகு புரட்சித்தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்கள் கூறினார்கள்.

உடனே திரு.தமிழ்வாணன்,
**“ஒருகாலும் இந்த நாட்டை நடிகன் ஆளமுடியாது”** என்று சவால் விடுகிறார்.
**“சாதித்தே காட்டுவேன்”**
என மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் சபதம் ஏற்றுக் கொண்டார்.

கடைசியில் திரு. தமிழ்வாணன் தோற்றுப் போனார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்
தமிழ் நாட்டின் முதலமைச்சர் ஆனார்கள்.

எந்த மாநிலத்திற்கும் கிடைக்காத
முதலமைச்சராக நமக்குக் கிடைத்தார்கள்.
மாநிலத்தில் நடக்கும் எந்த பிரச்சனையையும்
எளிதாக சமாளிக்கும் வல்லமை படைத்த முதலமைச்சராக நமக்குக் கிடைத்தார்கள்.

உதாரணத்திற்கு இதே தர்மபுரியில்
நடந்த ஒரு சம்பவத்தைக் கூறலாம்.
1980–ல் நடந்த சம்பவம்.
தர்மபுரியில் நக்ஸல் இயக்கம்
தலைதூக்க ஆரம்பித்தது.
**“நக்ஸல்களுக்கு எதிரான
மக்கள் ஆதரவை பெறுகிற வேலையைச் சந்தடியில்லாமல் செய்ய வேண்டும்.
அப்போதுதான் நக்ஸல்களின் நடமாட்டங்களை மக்களிடமிருந்தே கேட்டறிய முடியும்”** என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் காவல் அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்கள்.

பணியில் இருந்த காவலர்கள் சிலரை
நக்ஸல் இயக்கத்தினர் கொன்றபோது எதிர்க்கட்சியினர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஆட்சிக்கு கடுமையான கண்டனம் தெரிவித்தார்கள்.

**“மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு இல்லை.
எனவே ஆட்சியை கலைக்க வேண்டும்”**
என்று இப்போது சொல்வதைப் போலவே
அப்போதும் சொல்லியிருக்கிறார்கள்.

அதைப்பற்றியெல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் கவலைப்படாமல். அந்தப்பிரச்சனையை எளிதாக சமாளித்தார்கள். இறந்துபோன காவல் ஆய்வாளர் ஒருவரின் இறுதி ஊர்வலத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களே கலந்து கொண்டார்கள்.

இறுதி ஊர்வலத்தை நக்ஸல் ஆதிக்கம் இருந்த திருப்பத்தூர் நகர வீதிகளில் எல்லா மக்களும் காணும்படி உருக்கமான ஊர்வலமாக நடத்தினார்கள்.

இதனால் தீவிரவாதத்திற்கு எதிரான மக்களின் உணர்வு கிளர்ந்து எழுந்தது. அதுமட்டுமல்ல, இறந்துபோன காவல் ஆய்வாளர் குடும்பத்திற்கு எதிர்க்கட்சிக்காரர்களே ஆச்சரியப்படும் அளவிற்கு பெருந்தொகை ஒன்றை வழங்கி,
அவர்கள் குடும்பத்தை காத்ததுடன்,
நக்ஸல் பிரச்சனையையும் வேரோடு அறுத்து
முடிவுக்கு கொண்டு வந்தார்கள்.

1982ல் சென்னையில் கடுமையான
குடிநீர் பிரச்சனை ஏற்பட்டது.
பிரச்சனையை சமாளிக்க
நெய்வேலியிலிருந்து லாரிகள் மூலமும், ஆந்திராவிலிருந்து கோதாவரி நதிநீரை ரயில்கள் மூலமும்,
சென்னைக்கு வரவழைத்து சமாளித்தார்கள்.

இந்த இக்கட்டான நேரத்தில்தான்
சமயோசிதமாக செயல்பட்டு கிருஷ்ணா நீர் சென்னைக்கு கிடைக்க ஆந்திர அரசுடன்
ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்.

பிரச்சனைகளை எப்படி சமாளிக்க வேண்டுமென்று எங்கள் மகத்தான தலைவர்கள் எங்களுக்கு
பயிற்சி அளித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும்,
மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களும்
எங்களிடம் சொல்லிவிட்டுப் போன தாரகமந்திரம்.

**‘ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணுங்கள்’** என்பதுதான்.

நாங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியால் ஆட்சிப் பொறுப்பேற்ற
அந்த மணித்துளியிலிருந்து,
தமிழ் நாட்டு மக்களை மகிழ்ச்சியோடு
வைத்திருக்க அல்லும் பகலும் அயராது உழைத்துக்கொண்டிருக்கின்றோம்.

இதற்கு எடுத்துக்காட்டாக
கடந்த தி.மு.க ஆட்சிக் காலத்தில்
மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு
9 ஆயிரத்து 838 கோடி ரூபாய்
கடன் வழங்கப்பட்டது என்றும்,

அந்த சுழல் நிதியினை அப்போதைய
துணை முதல்வர் அவர்கள் நின்று கொண்டே வழங்கினார்கள் என்றும்
பெருமையாக பேசினார்கள்.

ஆனால், 2011 –2016 ஆம் ஆண்டு
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் மட்டும்
**26 ஆயிரத்து 461 கோடி ரூபாய் கடனுதவி,**
**எந்தவித ஆரவாரமும் இல்லாமல் வழங்கப்பட்டது.**

**தி.மு.க ஆட்சிக் காலத்தில் கொடுத்த**
**9 ஆயிரத்து 838 கோடி ரூபாய் எங்கே...**

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அள்ளி கொடுத்த 26 ஆயிரத்து 461 கோடி ரூபாய் எங்கே....**

இந்த இரண்டுக்கும்
எவ்வளவு வித்தியாசம் பாருங்கள்.

மேலும், இத்திட்டத்தின் கீழ் வருடா வருடம்
சுமார் 2 லட்சத்து 25 ஆயிரம் குழுக்களுக்கு
மிகாமல் சுழற்சி முறையில் கடனுதவி வழங்கப்படுகிறது. **இது அகில இந்திய அளவில் மிகப்பெரிய சாதனையாகும்.**

மக்கள் உங்களுக்கு ஐந்து முறை
பொன்னான வாய்ப்பு கொடுத்து பார்த்தார்கள்.
ஐந்து முறையும் நீங்கள் ஆடிய ஆட்டமும்,
அடித்த கொட்டமும் கொஞ்சம் நஞ்சமா?

ஐந்து முறையும் ஆட்சியை மக்கள் நலனுக்காக நீங்கள் பயன்படுத்தியிருந்தால்
அப்போதே தமிழகம் செல்வச் செழிப்புள்ள
வளமான மாநிலமாக மாற்றப்பட்டிருக்கும்.

இதை,
“ **மக்கள் நலம் மக்கள் நலம் என்றே சொல்லுவார் –**
**தம் மக்கள் நலம் ஒன்றே தான் மனதில் கொள்வார்** ”
என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தன் பாடலின்
வாயிலாக சாடியிருப்பார்.

இந்த நாட்டில் தீர்க்கப்படாமலிருந்த
எந்த பிரச்சினையையும் உங்களால்
தீர்க்க முடியவில்லை அல்லது
தீர்த்து வைக்க உங்களுக்கு எண்ணமோ,
நேரமோ இல்லை.

அதனால்தான் தமிழ்நாட்டுக்கு
விடிவெள்ளியாக வந்த மாண்புமிகு
புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
ஏற்றங்கள் பல தந்தார்கள்.

தங்களுக்கு சாதகமான சட்டங்கள்
போடுவதால் பலன் ஒன்றுமில்லை.
மக்களுக்கு ஏற்ற திட்டங்கள்
போடவேண்டும் என்று சமுதாயத்தின் கடைக்கோடியிலிருக்கிற ஏழை எளிய
மக்களை மையமாகக் கொண்டு அவர்களின்
வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிற அளவிற்கு
பார்த்து பார்த்து திட்டங்கள் போட்டவர்கள்
எங்கள் இருபெரும் தலைவர்கள்.

அவர்களுடைய பாசறையிலிருந்து அரசியல் மற்றும் ஆளுமை பயிற்சி பெற்று வந்தவர்கள் நாங்கள்.

மக்களை மகிழ்ச்சியோடு வைத்திருக்க
மக்கள் நலத் திட்டங்களை சிந்தித்து சிந்தித்து வகுத்துக் கொண்டிருக்கிறோம்.

நாங்கள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு ஆட்சிப் பொறுப்பேற்ற நாளிலிருந்து இது வரை 17 மாவட்டங்களுக்கு சென்று அந்தந்த மாவட்டத்தின் தேவைகளை அறிந்து திட்டங்களை தீட்டி அவற்றை உடனடியாக செயல்படுத்த அந்தந்த துறை அமைச்சர்களையும்,
அரசு அலுவலர்களையும் முடுக்கி விட்டிருக்கிறோம்.

இதுவரைக்கும் இந்த கூட்டத்தின் முன்பாக 17 மாவட்டத்தில் பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய நூற்றாண்டு விழாவை கொண்டாடியிருக்கின்றோம். இப்பொழுது 18வது மாவட்டமாக இன்றைக்கு தருமபுரியில் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய நூற்றாண்டு விழா என்ற பெயரில் இந்த மகத்தான தலைவரின் எண்ணங்களை பூர்த்தி செய்வதற்காகவே, ஒவ்வொரு மாவட்ட விழாவிலும் மக்களுக்கான நலத்திட்ட பணிகளை அறிவித்து, லட்சக்கணக்கான மக்கள் பயன்பெறுகின்ற அளவிற்கு விழா நடத்தி வருகின்றோம்..

அதன் தொடர்ச்சியாகத்தான் இன்றும்
18வது மாவட்டமாக, தருமபுரி மாவட்டத்திற்கு
பல திட்டங்களை  கொண்டு வந்திருக்கின்றோம்.

அவற்றை முழுமையாக கூறினால் நேரம் ஆகும் எனவே, சுருக்கமாக கூறிவிடுகின்றேன்.
கடந்த ஆறு ஆண்டுகளில்
**தருமபுரி மாவட்டத்தில் மட்டும்**  கடந்த ஆறு ஆண்டுகளில் தருமபுரி மாவட்டத்தில் மட்டும் பல்வேறு பணிகள் நடைபெற்றிருக்கின்றன.  இன்றைக்கு எதிர்க்கட்சிகள் எல்லாம் வசைபாடிக் கொண்டிருக்கின்றன.
எதிர்க்கட்சித்தலைவர் இந்த ஆட்சியிலே என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது, இந்த ஆட்சியிலே மக்களுக்கு என்ன திட்டங்களைக் கொடுத்திருக்கின்றார்கள், இந்த மக்களுக்கு என்ன பலன் கிடைத்திருக்கிறதென்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.  எப்பொழுது தொலைக்காட்சியிலே பார்த்தாலும் அவருடைய பேட்டி இப்படித்தான் இருக்கின்றது.  ஆகவே தான், நாங்கள் இதைக் குறிப்பிடுகின்றோம்.
புரட்சித்தலைவி அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில் போடப்பட்ட திட்டங்கள் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு, மக்களுக்கு பலன் கிடைத்திருக்கின்றது.
அந்தத் திட்டங்களையெல்லாம் புள்ளி விவரத்தோடு சொல்லுகின்றோம்.

பொதுப்பணித் துறை சார்பில் 32 கோடியே 55 லட்சம் ரூபாய் செலவில்
37 ஏரிகள், 79 அணைக்கட்டுகள், 6 அணைகள் மற்றும்
122 கி.மீ.  நீர்வரத்துக் கால்வாய்கள் புனரமைக்கப்பட்டும்,
இரண்டு தடுப்பு அணைகள் கட்டப்பட்டும் உள்ளன.

இதையெல்லாம் அம்மாவினுடைய ஆட்சியில் கட்டப்பட்டது.  அம்மா விட்டுச் சென்ற பணியை அம்மாவினுடைய அரசு தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது  என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

பென்னாகரம் பகுதி விவசாய பெருமக்களின் பயன்பாட்டிற்காக 14 கோடியே 15 லட்சம்ரூபாய் செலவில் புதிய நீர்நிலை ஒன்று,
மத்தளப்பள்ளம் அருகே அமைத்து வழங்கு வாய்க்கால்
மற்றும் கிளைக் வாய்க்கால்கள் அமைக்கப்பட்டுள்ளன.
இதன் மூலம்  ஆயிரத்து 100 ஏக்கர் பாசன வசதி
பெறுகிறது.

**குடிமராமத்து திட்டத்தின் கீழ் 1 கோடியே
56 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 21 ஏரிகள்
சீரமைக்கப்பட்டுள்ளன.**

விவசாயிகளின் விளை நிலங்களை மேம்படுத்திக் கொள்ள இதுவரை 28ஆயிரத்து 224 விவசாயிகளுக்கு 16.92 லட்சம் கன மீட்டர் வண்டல் மண் வழங்கப்பட்டுள்ளது.

பழுதுபார்த்தல், சீர்ப்படுத்துதல் மற்றும் புனரமைத்தல் திட்டத்தின் கீழ் பென்னாகரம் வட்டத்தில் 7 ஏரிகளை 2 கோடியே 76 லட்சம் ரூபாய் செலவில் சீர் செய்யும் பணிகள் துவங்கப்பட உள்ளன. தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் மற்றும் புளோரைடு பாதிப்பு குறைப்புத் திட்டம் ஆயிரத்து 928 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 29.5.2013 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

இந்த திட்டத்தின் மூலம் தருமபுரி நகராட்சி, 10 பேரூராட்சிகள் மற்றும் 8 ஊராட்சி ஒன்றியங்களில் 251 ஊராட்சிகளில் உள்ள 3ஆயிரத்து 313 குடியிருப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு 120 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது.

இந்த திட்டம் கடந்த 4 ஆண்டுகளை தாண்டி வெற்றிகரமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்து மக்களின் தாகத்தை தீர்த்து வருகின்றது.

மேலும், காவிரி ஆறு மாசுபடுவதை தவிர்க்கும் வகையில் ஒரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் கீழ் 101 கோடியே 56 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 69ஆயிரத்து 76 மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

இது சாதாரண திட்டமல்ல. இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா தொலைநோக்கு சிந்தனையோடு நம்முடைய மாணவர்களுடைய திறமையை வளர்ப்பதற்காக விஞ்ஞான கல்வியை இந்த தருமபுரி மாவட்டத்தில் கடைக்கோடியில், குடிசையில் இருக்கின்ற மாணவ, மாணவியர்கள் கூட உலக அளவிலே பிரசித்தி பெற்ற மாணவனாக, அறிவுத்திறன் படைத்த மாணவர்களாக திகழவேண்டும் என்பதற்காக அம்மா அவர்கள் 101 கோடி ரூபாய் இந்த மாவட்டத்திற்கு வழங்கியிருக்கிறார்கள்.

விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் 36 கோடியே 92 லட்சம்

ரூபாய் மதிப்பீட்டில் ஒரு லட்சத்து 7 ஆயிரத்து 340 மிதிவண்டிகள்
வழங்கப்பட்டுள்ளன.

கடத்தூரில் அரசு பல்வகை தொழில் நுட்பக்
கல்லூரி 30 கோடி ரூபாய் செலவில்
கட்டப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட
138 கோடியே 87 லட்சம் ரூபாய் பயிர்க்கடன்
தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம்
27 ஆயிரத்து 924 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்
பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ்
153 கோடியே 52 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
ஏழை எளிய குடும்பங்களுக்கு சூரிய மின் சக்தியுடன்
கூடிய 9ஆயிரத்து135 பசுமை வீடுகள் கட்டப்பட்டு
வழங்கப்பட்டுள்ளன.

மேலும் 11 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
623 பசுமை வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

தாய் திட்டத்தின் கீழ் 8 கிராம ஊராட்சிகளைச்
சார்ந்த குக்கிராமங்களில் 96 கோடியே 24 லட்சம்
ரூபாய் மதிப்பீட்டில் 13 ஆயிரத்து 844 பணிகள்
மேற்கொள்ளப்பட்டுள்ளன.
நடப்பாண்டில் 53 கோடியே 64 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 816 பணிகள்
மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ்
118 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
10ஆயிரத்து783 வீடுகள் கட்டி தரப்பட்டுள்ளன. மேலும் 72 கோடியே 67 லட்சம்
ரூபாய் மதிப்பில்
4 ஆயிரத்து 275 வீடுகளுக்கான பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

54 ஆயிரத்து 670 சுய உதவிக் குழுக்களுக்கு கடந்த
ஆறு ஆண்டுகளில் ஆயிரத்து 735 கோடி ரூபாய்
வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மகசூல் பாதித்த விவசாயிகளுக்கு வறட்சி
நிவாரணமாக 19 கோடியே 14 லட்சம்
ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.
இதன் மூலம் 74 ஆயிரத்து 670 விவசாயிகள்

பயன் பெற்றுள்ளனர்.

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்
கீழ் 12 ஆயிரத்து 523 விவசாயிகள் 7 ஆயிரத்து 436
ஏக்கர் சாகுபடி பரப்பிற்கு 15 கோடியே
3 லட்சம் ரூபாய் இழப்பீடு பெற்று பயனடைந்துள்ளனர்.

நெடுஞ்சாலைத் துறையின் சார்பில்
295 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
816.74 கி.மீ நீளமுள்ள சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
879 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 7 பாலம்,
சிறு பாலம், மேம்பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
படித்த பெண்களுக்கான திருமண உதவி திட்டத்தின் கீழ் 63 கோடியே 50 லட்சம்
ரூபாய் நிதி உதவி
மற்றும் 110.54 கிலோ தங்கம் வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு
நிதியுதவி திட்டத்தின் கீழ் 81 ஆயிரத்து 582 கர்ப்பிணி
தாய்மார்களுக்கு 82 கோடியே 74 லட்சம் ரூபாய்
நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்
விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்
கீழ் 41 ஆயிரத்து 935 பயனாளிகளுக்கு 92 கோடியே
34 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சிகிச்சைகள்
அளிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின்
சார்பில் பாலவாடியில் 981 கோடியே 85 லட்சம்
ரூபாய் செலவில் கட்டப்பட்ட துணை மின்நிலையம்
உட்பட ஆயிரத்து 44 கோடியே 87 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 33 பணிகள்
என்னால் இன்று திறந்து
வைக்கப்பட்டுள்ளன.

பள்ளிக் கல்வித் துறை உட்பட 4 துறைகளின்
சார்பில் 29 கோடியே 44 லட்சம் ரூபாய் செலவில் 20 பணிகளுக்கு அடிக்கல்
நாட்டியுள்ளேன்.

மேலும் பல்வேறு துறைகளின் சார்பில்
25 ஆயிரத்து 596 பயனாளிகளுக்கு
182 கோடியே 99 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
பல்வேறு நலத் திட்ட உதவிகளை
வழங்க உள்ளேன்.

இந்த அரசு பொறுப்பேற்ற 16.2.2017 முதல்
இன்று வரை **மாநிலம் முழுவதும்** நிறைவடைந்த

**8 ஆயிரத்து 451 கோடியே 7 லட்சம் ரூபாய் மதிப்பிலான 34 ஆயிரத்து 96 திட்டப் பணிகளை தொடங்கி வைத்தும்,**

**3 ஆயிரத்து 482 கோடியே 5 லட்சம் ரூபாய் மதிப்பிலான 6 ஆயிரத்து 716 பணிகளுக்கு**
**அடிக்கல் நாட்டியும் உள்ளேன்.**

**ஆக மொத்தம் 11 ஆயிரத்து 933 கோடியே**
**12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான**
**40 ஆயிரத்து 812 பணிகள்**
**செயல்படுத்தப்பட்டு வருகின்றன.**

இப்படிப்பட்ட மக்கள் நலத்திட்டங்களை நான் ஒவ்வொரு விழாவிலும் சுருக்கமாக அறிவித்துக் கொண்டிருக்கிறேன்.

அரசியல் வேறுபாடு இல்லாமல் மக்கள் அனைவரும் இந்தத் திட்டங்களால் பலன் அடைந்து வருகிறார்கள்.

அவர்கள் அனைவரும் மாண்புமிகு
புரட்சித் தலைவி அம்மா அவர்களின்
ஆட்சியை பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் சிலர் எவ்வளவு கொடுத்தாலும் திருப்தியடையாமல், அரசு பலன்களை அனுபவித்துக்கொண்டு அரசை குறைகூறுவதையே வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களை இறைவனாலும்
திருப்திப்படுத்த முடியாது.
இதை கூறுகிற போது
எனக்கு கதை ஒன்று
நினைவுக்கு வருகிறது.

ஒரு கிராமத்தில் அடர்ந்த இலைகளும்,
பூக்களும் கூடிய ஒரு மரம் இருந்தது.

அம்மரத்தில் உள்ள இலைகள் இதமான காற்றினை அங்குள்ள மக்களுக்கு வழங்கி வந்தது.

அம்மரத்தின் பூக்கள் மக்கள் மனங்களை
கவரும் வகையில் நறுமணம் மிக்கவைகளாக

இருந்தன.

அக்கிராம மக்கள் எல்லாம்
நிழலுக்காக அந்த மரத்தின்
அடியில் அமர்ந்து, அந்த மரம் தரும்
நறுமணம் கலந்த  இதமான காற்றினை
சுவாசித்தும், அனுபவித்தும் வந்தார்கள்.

இதனைப் பார்த்த அந்த மரத்தில் உள்ள
ஒரு பூ என்னால் தான் இந்த மக்கள்
இதமான, நறுமண காற்றின்
சுகத்தினை அனுபவிக்கிறார்கள்
என்று கர்வமாக நினைத்தது.

அந்த நேரத்தில் காற்றானது பூவிடம்,

**“நீ ரொம்ப அழகாக இருக்கிறாய்.
உன்னால்தான் இந்த மரத்திற்கே பெருமை.
நீ இல்லையென்றால், இம்மரத்தினால்
இதமான நறுமண காற்றை
அளிக்க முடியாது. இதனால்
மரத்திற்கு பெருமை குறையும்.
இத்தகைய திறமை வாய்ந்த நீ
இந்த குறுகிய வட்டத்திற்குள் இல்லாமல்
என்னுடன் வந்தால்  உன் பெருமை
இந்த உலகத்திற்கே தெரியும்,”** என்றது.

காற்றின் பேச்சைக் கேட்ட பூவானது,
கர்வம் கொண்டது.
காற்றுடன் சென்றால் தனது அழகும்,
பெருமையும் உலகம் முழுக்கத் தெரியும் என்றும்,
 மரத்தைவிட உயர்ந்த இடத்திற்கு
செல்லலாம் என்றும் கருதி
மரத்திலிருந்து பிரிந்து காற்றுடன் சென்றது.

ஆனால் காற்றால் எல்லா நேரமும்
ஒரே சீராக வீச முடியாது.
காற்றின் வேகம் குறைந்த நேரத்தில்,
அந்த பூவானது கிழே விழுந்தது.
கீழே விழுந்த பூவானது
சிறிது நேரத்தில் வெயிலில் காய்ந்து,
சருகாகி குப்பை மேட்டிற்கு சென்று விட்டது.

மரத்தை விட்டு பூ செல்வதனால்

மரத்திற்கு எந்த பாதிப்பும் இல்லை.
ஒரு பூ சென்றால்,
இன்னொரு பூ துளிர்விடும்.

இது மாதிரி எவ்வளவு பூக்கள்
மரத்திலிருந்து விழுந்தாலும், புதிய பூக்கள்
துளிர்விட்டுக் கொண்டே இருக்கும்.
மரத்தில் இருக்கும் வரைக்கும் தான்
பூவிற்கு மதிப்பு.
மரத்தை விட்டு கீழே விழுந்துவிட்டால்
அது குப்பமேட்டிற்குத்தான் செல்லும்.

அதுபோல் யார் எங்கு சென்றாலும்,
மரத்தைப் போல் இந்த இயக்கம்
துளிர் விட்டுக் கொண்டே இருக்கும்.

இயக்கத்திற்கு துரோகம் செய்து சென்றவர்களுக்கு
கீழே விழுந்த பூவின் கதிதான் ஏற்படும்.

தருமபுரி மாவட்டத்திலே இருவர் பாதை மாறி சென்றுவிட்டார்கள். அவர்கள் போனால் என்ன, தருமபுரி மாவட்டத்திலுள்ள கழக நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள், நாங்கள் அம்மாவின் அரசுக்குஇஅரணாக இருக்கின்றோம் என்று குழுமி அரங்கம் நிரம்பி வழிகின்ற காட்சியே இதற்கு சாட்சி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு எதிர்க்கட்சியெல்லாம் ஏதாவது ஒரு குறையை சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். எதிர்க்கட்சித்தலைவர் எப்போது பேட்டி கொடுத்தாலும், இந்த ஆட்சியை கவிழ்க்கவேண்டும், இந்த ஆட்சியை வீட்டிற்கு அனுப்ப வேண்டும் என்று தான் அவருடைய வேதவாக்காக இருந்து கொண்டிருக்கின்றது. இன்றைக்கு அவர்கள் தேடிதேடி, பூதக்கண்ணாடி வைத்து பார்க்கின்றார்கள், ஒன்றுமே கண்டுபிடிக்க முடியவில்லை. ஏதாவது ஒரு பிரச்சினையை எடுத்துக்கொண்டு போராட்டத்தை நடத்தி, இந்த அரசுக்கு ஒரு நெருக்கடியை கொடுத்து கெட்ட பெயர் எடுத்துக் கொடுக்க வேண்டும் என்பதே அவர்களுடைய நிலைபாடு. ஆனால், அம்மாவினுடைய அரசு எல்லா திட்டங்களையும் திறம்பட செயல்பபத்தி மக்கள் எங்கள் பக்கம் இருக்கின்றோம் என்பதற்கு இங்கு குழுமியுள்ள மக்களே சாட்சி என்பதை இந்த நேரத்திலே நினைவுகூர கடமைப்பட்டுள்ளேன். இன்றைக்கு தமிழகத்திலே சீதோஷ்ண நிலை மாறிய காரணத்தினாலே, ஆங்காங்கே டெங்கு காய்ச்சல் பரவி கொண்டிருக்கின்றன. அதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. பருவகாலங்களில் ஏற்படும் காய்ச்சல் குறிப்பாக, டெங்கு காய்ச்சல் கட்டுப்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. இப்பணிகளை மேலும் தீவிரப்படுத்த வாரந்தோறும் ஒவ்வொரு வியாழக்கிழமையும் “**டெங்கு தடுப்புத் தினம்**” என அறிவித்து,

தூய்மைப் பணிகள், டெங்கு தடுப்பு நடவடிக்கைப் பணிகள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஆகியவற்றை துரிதப்படுத்த தமிழ்நாடு அரசு முடிவெடுத்து, அதனை 5.10.2017 முதல் தொடர்ந்து செயல்படுத்துகிறது.

தமிழ்நாடு அரசின் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளுக்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என இந்த நேரத்திலே வேண்டி விரும்பிகேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு இந்த டெங்கு ஒழிப்பிற்காக 23.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, செல் கவுண்ட்டர் கருவிகள் வாங்குவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் மூலமாக 837 செல் கவுண்ட்டர் வாங்கப்பட்டு அரசு மருத்துவமனையிலே வழங்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு ரத்த அணுக்களை கண்டுபிடிக்கக்கூடிய கருவி. இன்றைக்கு சீதோஷ்ண நிலை மாறிய காரணத்தினால், ஆங்காங்கே மழைப் பொழிவு ஏற்பட்ட காரணத்தினாலே, டெங்கு கொசு நல்ல தண்ணீரிலிருந்து தான் உருவாகிறது. ஆகவே, அப்படி உற்பத்தியாகின்ற அந்த கொசு நம்மை கடிக்கின்ற பொழுது, இந்தக் காய்ச்சல் நமக்கு ஏற்படுகின்றது. ஆகவே, பொதுமக்கள், காய்ச்சல் ஏற்பட்டவுடனேயே ஆங்காங்கே இருக்கின்ற மருத்துவமனையிலே நீங்கள் ரத்த மாதிரிகளை கொடுத்து, உடனடியாக 40 வினாடிகளில், இந்த செல் கவுண்ட்டர் கருவியின் மூலமாக உங்கள் ரத்தத்திலே இருக்கின்ற அணுக்களிலே டெங்கு காய்ச்சல் இருக்கின்றதா, இல்லையா என்பதை தெரிந்து கொண்டு உடனுக்குடன் சிசிச்சை அளிக்கின்ற முறையை இன்றைக்கு அம்மாவினுடைய அரசு ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது. ஆகவே, இங்கே வந்திருக்கின்ற பொதுமக்கள் வாயிலாக தெரிவித்துக் கொள்வது, காய்ச்சல் ஏற்பட்டால் நீங்கள் உடனடியாக மருத்துவர்களை சந்தித்து, தக்க பரிசோதனை செய்து அந்த பரிசோதனையின் மூலமாக என்ன காய்ச்சல் என்று தெரிந்து, அதற்கு சிகிச்சை மேற்கொண்டால், நிச்சயமாக இந்த நோயிலிருந்து குணமடையலாம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஆகவே, இன்றைக்கு அரசை பொறுத்தவரைக்கும், இந்த டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கப்பட்டு வருகின்றன, தேவையான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்ல, இந்த டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்துவதற்காக ஏற்கனவே 25000 மஸ்தூர்கள் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, டெங்கு காய்ச்சலை முற்றிலும் ஒழிக்கவேண்டும் என்ற நடவடிக்கையின் மூலமாக மேலும், இன்றைக்கு கூடுதலாக 15000 மஸ்தூர்கள் நியமித்து, 40000 மஸ்தூர்கள் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டருக்கின்றேன். அதுமட்டும்லல, ஆங்காங்கே கொசு மருந்து அடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த டெங்கு காய்ச்சலை குணப்படுத்துவதற்கு துறையின் வாயிலாக, பேருந்து நிலையம், ரயில் நிலையம், அரசு மருத்துவமனை, பள்ளி மற்றும் மக்கள் அதிகமாக கூடுகின்ற இடங்களிலே நிலவேம்பு சாறு வழங்கப்பட்டு வருகின்றது. இதன் மூலமாக டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்துவதற்கு அரசால் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இந்த கொசுவை பொறுத்தவரைக்கும்,

நல்ல தண்ணீரில்உருவாகிறது. ஆகவே, நம் வீட்டில் தண்ணீர் வைத்திருக்கிறோம். அந்த தண்ணீரில் தான் இந்த கொசுவே உற்பத்தியாகின்றது. வீட்டில் தண்ணீர் வைத்துவிட்டு, சில நேரங்களில் 20 நாட்கள், 15 நாட்கள் வெளியூர் சென்றுவிடுவோம். அந்த தண்ணீரை மூடாமல் சென்றுவிட்டால், அந்த தண்ணீரில் தான் அந்த கொசு உருவாகிறது. ஆகவே, பொதுமக்கள் வீடுகளில் உள்ள நீரை மூடி வைக்க வேண்டும். அதேபோல, குளிக்கின்ற அறையில் இருக்கும் நீரை மூடி வைக்க வேண்டும். அதுபோல, குளிக்கின்ற நீர் வெளியேறுகின்ற பொழுது, அங்கே தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட பகுதிகளில் தான் இந்தக் கொசு உற்பத்தியாகிறது. ஆகவே, நாம் கவனமோடு கையாள வேண்டும், இந்தக் கொசு உற்பத்தியை தடுக்க வேண்டும், அப்போது தான் இந்த டெங்கு காய்ச்சலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். அதுமட்டுமல்ல, இந்தக் கொசு 21 நாள் உயிர் வாழும். கிட்டத்தட்ட 500 மீட்டர் பறக்கக்கூடியது. இந்த ஒவ்வொரு கொசுவும் கிட்டத்தட்ட1500 முட்டையிடுகிறது. அந்த 21 நாளும், 1500 முட்டையும், ஒவ்வொரு கொசுவும் அப்புறம் 1500 முட்டையிடுகிறது. அப்படியென்றால், எந்த அளவிற்கு வேகமாக இந்த கொசு பரவியிருக்கிறது, உற்பத்தியாகின்றது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, வந்திருக்கின்ற பொதுமக்கள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள்,பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஆகவே, நன்னீராக இருந்தாலும், அதை மூடிவைக்க வேண்டும். வெளியூர் சென்றால் அந்த தண்ணீரை அகற்றிவிட வேண்டும், அல்லது மூடிவைத்து செல்லவேண்டும் என்று இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, அரசை பொறுத்தவரைக்கும் இன்றைக்கு 10516 செவிலியர்கள் நியமித்திருக்கிறோம். அதோடு மேலும் 2000 செவிலியர்கள் இந்த டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்துவதற்காக தேர்வு செய்ய இருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, இன்றைக்கு அம்மாவின் அரசு ஏற்படுத்தப்பட்ட பிறகு, 1113 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள், 650 சிறப்பு மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். மேலும் 744 சிறப்பு மருத்துவர்களை நியமிக்க இருக்கின்றோம். இப்படிப்பட்ட மருத்துவர்கள், செவிலியர்களெல்லாம் நியமிக்கப்பட்ட காரணத்தினாலே, இன்றைக்கு டெங்கு காய்ச்சலால் அல்லது வைரஸ் காய்ச்சலால் யார் பாதிக்கப்பட்டாலும், மருத்துவமனைக்கு சென்றால், உடனடியாக சிகிச்சை செய்யக்கூடிய அளவிற்கு அரசால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏனென்றால், இன்றைக்கு வேண்டுமென்றே திட்டமிட்டு, இந்த டெங்கு காய்ச்சலை தவறாக பிரச்சாரம் செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, அரசைப் பொறுத்தவரைக்கும், இந்தக் காய்ச்சலை கட்டுப்படுத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே ஊடக நண்பர்கள் வந்திருக்கிறார்கள், டெங்கு கொசு எப்படி உற்பத்தியாகிறது, அதை எவ்வாறு தடுப்பது என்பதைப் பற்றியெல்லாம்

விழிப்புணர்வை குறும்படங்களின் மூலமாக தொலைக்காட்சியின் வழியாக அடிக்கடி ஒளிபரப்பி, டெங்கு காய்ச்சலைப் பற்றிய விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு அவர்களை கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், எல்லா மக்களும் தொலைக்காட்சியை பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, ஊடக நண்பர்கள் இந்த டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்துவதற்கு நீங்களும் அரசிற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே உங்களுடைய மாவட்ட மாண்புமிகு அமைச்சர் திரு அன்பழகன் அவர்கள் பல்வேறு கோரிக்கை வைத்தார்கள். இந்த மாவட்ட மக்கள் பின்தங்கிய மாவட்டம், இந்த மாவட்டத்திற்குத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும், பின்தங்கிய மாவட்டத்திற்கென்று தனிகவனம் செலுத்தி, அந்த மாவட்டத்திற்குத் தேவையான அனைத்தும் செய்துதரப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். அவர் ஏற்கனவே உங்களுடைய மாவட்டத்தில் இருக்கின்ற பிரச்சினைகளை பட்டியலிட்டு என்னிடத்தில் கொடுத்திருக்கின்றார். அரசு, அவர் கொடுத்த கோரிக்கைகள் பலவற்றை நிறைவேற்றித் தரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அதிலே சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

இம்மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருக்கும் கழகக் கண்மணிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் வாகனங்களில் பத்திரமாக ஊர் போய் சேர வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விழாவை சிறப்பாக
ஏற்பாடு செய்த நல்ல உள்ளங்களுக்கு
எனது மனமார்ந்த பாராட்டுகளை
தெரிவித்துக் கொண்டு
இந்த அரசு உங்களின் சேவகனாக
தொடர்ந்து பணியாற்றும் என்பதை
தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

**நேற்றும் நமதே!**
**இன்றும் நமதே!**
**நாளையும் நமதே!**
**வாழ்க அண்ணா நாமம்!**
**வளர்க புரட்சித் தலைவர் புகழ்!**
**தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!**
**நன்றி! வணக்கம்!**

‘’’’’’’’

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**